SE – 161

**II Semester B.A./B.Sc./B.C.A./B.Sc.(FAD)/B.P.A./B.V.A./B.S.W. Examination, June/July 2025**
**(SEP)**
**TAMIL LANGUAGE (Paper – II) (Part – I)**

Time : 3 Hours Max. Marks : 80

SECTION – A

I. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **(3×8=24)**

1) ''உலகளந்த உத்தமர் பேர் பாடினால் கிடைக்கும் சிறப்புக்களாக'' ஆண்டாள் கூறுவனவற்றை எழுதுக ?

2) பரந்தாமனின் திருவடியை அடைவதற்காக ''விரதமிருக்கும் வழிமுறைகளை'' ஆண்டாள் கூறியதை எழுதுக ?

3) படைகளைப் பாசறையில் நிறுத்திவிட்டு பாண்டவர் அத்தினாபுரிக்குச் செல்லும் காட்சிகளை குறிப்பிடுக ?

4) ''கண்ணகி எஞ்சிய ஒற்றை சிலம்பை ஏந்தி'' நகர மாந்தரை நோக்கி முறையிட்டு அழுதலை விவரிக்க ?

5) சகுனியின் நயவுரைகளால் தருமனைச் சூதாட்டத்தில் அழைத்தல் நிகழ்வுகளை காட்சிப்படுத்துக ?

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×5=20)**

1) கள்வனோ அல்லன் கணவன் ; என் கால் சிலம்பு
கொள்ளும் விலைப் பொருட்டால் கொன்றாரே ! ஈது ஒன்று !

2) ''ஏங்க எனக்கு எதுனா ஆகிப்போச்சுனா நீங்க
என்ன செய்வீக ?'' என பாட்டி தயக்கமாய் கேட்டார்

3) 'இன்ன தாயம் வேண்டும்' என்று எறிந்த போது, மற்று அவன்
சொன்ன தாயமே புரண்டு சோர்வு இலாமல் வருதலின்

4) ''இரண்டு ஐநூறு ரூபாய்'' நோட்டுக்கள், நேராக பகல்
நேரத் தொலைக்காட்சித் தொடரில் மூழ்கியிருந்த
வள்ளிக்கண்ணுவின் முன்பு வந்து ''ரூபாய் நோட்டுக்களை''
நீட்டினாள்

P.T.O.

5) ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்

6) ''அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் 'ஆம்' என்னும்
பல் அவையோர் சொல்லும் பழுது அன்றே'' ...

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×4=16)**

1) வேற்றுமை உருபுகளைச் சான்றுடன் விளக்குக ?

2) தெரிநிலை வினைமுற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக ?

3) பகுபதத்தின் உறுப்புகளைச் சான்றுடன் விளக்குக ?

4) இலக்கண வகை சொற்கள் எத்தனை வகைப்படும் அவை யாவை ?

5) எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தை விளக்கி வரைக.

6) தொகா நிலைத் தொடர் என்றால் என்ன ? அவை யாவை ?

## SECTION – C

IV. "கண்ணீரும் தண்ணீரும்'' என்ற சிறுகதை தொகுப்பிலிருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு மட்டும் விரிவான விடை தருக. **(2×10=20)**

1) ''கானல் உறவுகள் ... !''

2) ''புளிச்சேப்பக்காரர்கள் ...''

3) ''தோழமை ...'

4) ''உள்ளம் பெருங்கோயில் ...''